**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு, பாட புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் மற்றும் உயர்கல்வி பயில ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் – 2014–2015 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை வழங்குதல் – ரூ.71.04 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1D) எண்.07** **நாள்: 04.02.2015**

**ஜய–தை 22, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (1D) எண்.09, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள் 26.03.2014.
2. அரசாணை (1D) எண்.12, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள் 04.06.2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3133/சிபதி/2014, நாள் 10.07.2014 மற்றும் 11.12.2014.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் ஆண்டிற்கு, அரசு சிறப்புப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் 10 மற்றும் 12ம் வகுப்பில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசுத் தொகை, பிரெய்லி புத்தகம், விடுதிக் கட்டணம் மற்றும் உயர்கல்வித் தொடர நிதியுதவி வழங்கும் திட்டத்தினைத் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.62,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும், அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டத்திற்கென கூடுதல் தொகையாக ரூ.8,64,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2014–15 ஆம் நிதியாண்டில், மாவட்ட அளவில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பெறும் பார்வையற்ற மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசுத் தொகை, உயர்கல்வி தொடர கட்டணம், பிரெய்ல் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.71,04,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும், திட்டத் தொடராணையும் வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, 2014–15 ஆம் ஆண்டில், மாவட்ட அளவில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளுக்கு ரொக்கப் பரிசு, உயர்கல்வி தொடர உதவித் தொகை, விடுதிக் கட்டணம் மற்றும்

**[த.பி.பா]**

பிரெய்லி பாடப் புத்தகங்கள் வாங்கி வழங்கிட ரூ.71,04,000/—ஐ, (ரூபாய் எழுபத்து ஒரு இலட்சத்து நான்காயிரம் மட்டும்) பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:—

| **வ. எண்** | **செலவின விபரம்** | | **தொகை** |
|---|---|---|---|
| **(1)** | **(2)** | | **(3)** |
| **1** | **<u>ரொக்கப் பரிசு – 10ம் வகுப்பு</u><br>மாவட்ட அளவில்** | | |
| | முதல் இடம் | ரூ.6,000/— | |
| | இரண்டாம் இடம் | ரூ.4,500/— | |
| | மூன்றாம் இடம் | ரூ.3,000/— | |
| | | **ரூ.13,500/—** | |
| | (ரூ.13,500 x 32 மாவட்டங்கள்) | | **ரூ.4,32,000/—** |
| **2** | **<u>ரொக்கப் பரிசு – 12ம் வகுப்பு</u><br>மாவட்ட அளவில்** | | |
| | முதல் இடம் | ரூ.12,000/— | |
| | இரண்டாம் இடம் | ரூ.7,500/— | |
| | மூன்றாம் இடம் | ரூ.4,500/— | |
| | | **ரூ.24,000/—** | |
| | (ரூ.24,000 x 32 மாவட்டங்கள்) | | **ரூ.7,68,000/—** |
| **3** | **10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்** | | |
| | 1. உயர்கல்வி தொடர கட்டணம்<br>(ரூ.1500 x 3 x 32 மாவட்டங்கள்)<br>(96 மாணவ/மாணவியர்கள்) | ரூ.1,44,000/— | |
| | 2. பிரெய்லி புத்தகங்கள்<br>(ரூ.3000 x3 x 32 மாவட்டங்கள்)<br>(96 மாணவ/மாணவியர்கள்) | ரூ.2,88,000/— | |
| | 3. விடுதிக் கட்டணம்<br>(ரூ.2000 x 3 x 32 மாவட்டங்கள் x 10 மாதங்கள்)<br>(96 மாணவ/மாணவியர்கள்) | ரூ.19,20,000/— | **ரூ.23,52,000/—** |
| **4** | **12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்** | | |
| | 1. உயர்கல்வி தொடர கட்டணம்<br>(ரூ.3000 x 3 x 32 மாவட்டங்கள்)<br>(96 மாணவ/மாணவியர்கள்) | ரூ.2,88,000/— | |
| | 2. பிரெய்லி புத்தகங்கள்<br>(ரூ.4000 x3 x 32 மாவட்டங்கள்)<br>(96 மாணவ/மாணவியர்கள்) | ரூ.3,84,000/— | |
| | 3. விடுதிக் கட்டணம்<br>(ரூ.3000 x 3 x 32 மாவட்டங்கள் x 10 மாதங்கள்)<br>(96 மாணவ/மாணவியர்கள்) | ரூ.28,80,000/— | **ரூ.35,52,000/—** |
| | **மொத்தம்** | | **ரூ.71,04,000/—** |

**[த.பி.பா]**

4. மேலே பத்தி 3–இல் காணும் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

**“2235 – சமூக பாதுகாப்பும் நலனும் - 02- சமூகநலன் 101 மாற்றுத் திறனாளிகள் நலன் I – திட்டத்தில் சேராதது – AA – பார்வையற்றோர் பள்ளி – 59 – பரிசுகளும் வெகுமதிகளும் ” (து.தொ.கு. 2235–02–101–AA- 5904).**

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.2434/நிதி(சந)/2015, நாள் 28.01.2015–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
**நகல்**
செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதி (சந) / (வ.செ.பொ–II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.